பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 07 2025 **SUNDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகளுக்கு தரமான உரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான இயக்கத்தை தொடங்குமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

2. சுகாதார சேவைகளை வழங்குவதில் தமிழகம் முன்னணியில் திகழ்வதாக மாநில ஆளுநர் திரு. ஆர். என். ரவி கூறியுள்ளார்.

3. தமிழகத்தில் மின் பற்றாக்குறை ஏதும் இல்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தின் வளர்ச்சிக்கு திமுக அரசு தடையாக உள்ளது என்று பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

5. ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டியின் முதல் ஆட்டத்தில் இந்தியா – கஜகஸ்தானை வென்றது. .

<<<<<>>>>>

விவசாயிகளுக்கு தரமான உரம் கிடைப்பதை உறுதி செய்வதற்கான இயக்கத்தை தொடங்குமாறு மாநில அரசுகளை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

தரமற்ற உரங்களை விநியோகம் செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அவர் அக்கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் குறைந்த விலையில் தரமான உரங்கள் கிடைப்பதை உறுதி செய்யும் பொறுப்பு அரசுக்கு உள்ளதாகவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

உர உற்பத்தி மற்றும் விற்பனையை தொடர்ந்து கண்காணிக்குமாறும் திரு. சிவராஜ்சிங் சௌஹான் அக்கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

<<<<<>>>>>

சுகாதார சேவைகளை வழங்குவதில் தமிழகம் முன்னணியில் திகழ்வதாக மாநில ஆளுநர் திரு. ஆர். என். ரவி கூறியுள்ளார்.

ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மருத்துவத் துறையில் சிறப்பாக பணியாற்றிவர்களுக்கான விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

கோவிட் பாதிப்பு காலத்தில் மருத்துவர்கள் ஆற்றிய பணி போற்றுதலுக்குரியது என்றும் அவர் தெரிவித்தார்.

மருத்துவ சேவை என்பது கடவுளுக்கு ஆற்றும் பணி போன்றது என்று அவர் குறிப்பிட்டார்.

மருத்துவர்கள் எவ்வாறு நடத்தப்பட வேண்டும் என்பது பள்ளிப் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும் என்றும் திரு. ஆர்.என். ரவி கூறினார்.

<<<<<>>>>>

நடப்பாண்டு இறுதிக்குள் 3 ஆயிரம் கோவில்களில் திருப்பணிகள் முடிவடைந்து குடமுழுக்கு நடத்தப்படும் என்று இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

ஈரோட்டில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - சேகர்பாபு 60 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

தமிழகத்தில் மின் பற்றாக்குறை ஏதும் இல்லை என்று மாநில அரசு தெரிவித்துள்ளது

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய மின்வாரியத் தலைவர் திரு. ராதாகிருஷ்ணன், வடசென்னையில் 800 மெகாவாட் மின்உற்பத்தி தொடங்கியுள்ளதாக கூறினார்.

உடன்குடி அனல்மின் நிலையத்தின் முதல் அலகில் மின்உற்பத்தி அடுத்த 3 மாதங்களுக்குள் தொடங்கப்படும் என்றும் திரு. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

<<<<<>>>>>

இளையோரின் நலனில் தனிக்கவனம் செலுத்தி வரும் மத்திய அரசு, அவர்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 9 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டுள்ள மத்திய அரசு, காலியாக உள்ள அரசு பணியிடங்களை உடனுக்குடன் பூர்த்தி செய்து வருகிறது.

இதன் அடிப்படையில் நாடுமுழுவதும் வேலைவாய்ப்பு திருவிழாக்கள் நடத்தப்பட்டு பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பிரதமர் திரு. நரேந்திர மோடி, நேற்று ஒரே நாளில் 51 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பணிநியமன ஆணைகளை காணொலி வாயிலாக வழங்கினார்.

மதுரையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பணிநியமன ஆணைகளை பெற்றுக் கொண்டவர்கள், இதற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - பயனாளின் 34 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

தமிழகத்தின் வளர்ச்சிக்கு திமுக அரசு தடையாக உள்ளது என்று பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், சட்டப்பேரவை தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி அமைக்க கட்சி நிர்வாகிகள் முழுமையாக பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வெற்றி நிச்சயம் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

சேலம் மாநகரின் மையப்பகுதியில் ஓடும் திருமணிமுத்தாற்றை சீரமைக்கும் பணி தொடங்கியுள்ளது.

இப்பணிகள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - விஜயகுமார் 52 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 3 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரை 56 செகண்ட்ஸ்)

<<<<<>>>>>

மாவட்டச் செய்திகள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் பழமைவாய்ந்த அதங்கோடு கரச்சிவிளை, ஸ்ரீகண்ட சாஸ்தா கோவிலின் கும்பாபிஷேக விழா இன்று விமரிசையாக நடைபெற்றது.

<<<<<>>>>>

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் அருகேயுள்ள சிவன்மலையில் ரேக்ளா போட்டி இன்று நடைபெற்றது.

<<<<<>>>>>

சென்னை, அயனாவரம் பகுதியில் உள்ள தங்கும் விடுதியில் பணம் வைத்து சூதாட்டத்தில் ஈடுபட்ட 3 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

<<<<<>>>>>

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு இன்று மாலை முதல் 20 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது..

<<<<<>>>>>

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து சாம்பியன் போட்டி இன்று சீனாவின் **Shenzhen-**ல் தொடங்கியது.

இந்தியா முதல் ஆட்டத்தில் 85-68 என்ற புள்ளிக்கணக்கில் கஜகஸ்தானை வென்றது.

<<<<<>>>>>

ஐரோப்பிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Shreyansh Jha** பட்டம் வென்றார்.

ஜெர்மனியில் நடைபெற்ற இப்போட்டியின், 15 வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர் 9-11, 11-3, 11-7, 11-6 என்ற செட்கணக்கில் போலந்தின் **Lohmann-**ஐ வென்றார்.

**<<<<<>>>>>**

இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் நான்காம் நாளான இன்று இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்ஸில் சற்றுமுன்வரை .4 . . . விக்கெட் இழப்புக்கு .109 . . ரன் எடுத்துள்ளது.

**<<<<<END>>>>>**